THE TAMIL NADU LEGISLATIVE COUNCIL

Monday, the 31st August 1970.

The House met in the Council Chamber, Fort St. George, at four of the clock, MR. CHAIRMAN (THE HON. THIRU C.P. CHITRARASU) in the Chair.

I. QUESTIONS AND ANSWERS

STARRED QUESTIONS

Local Library Authority

*51. *Q.*—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Minister for Education and Health be pleased to state :

(*a*) the number and value of books lost through theft, non-return and for other reasons in Libraries under the Local Library Authority in the State during 1967-68 ; and

(*b*) the steps taken thereon to meet this loss ?

நூலக ஆணைக் குழு

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி : மாண்புமிகு கல்வி—சுகாதார அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) 1967-68-ஆம் ஆண்டில், உள்ளூர் நூலக ஆணைக் குழுவின் கீழ் உள்ள நூலகங்களில், திருட்டு, திருப்பித்தராமை, ஏனைய காரணங்கள் ஆகியவற்றின் மூலமாக இழந்த நூல்களின் எண்ணிக்கையும், மதிப்பும் யாவை ?

(இ) இந்த இழப்பை ஈடுகட்ட எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : (அ) இழந்த புத்தகங்களின் எண்ணிக்கை 36,700. அவற்றின் மொத்த மதிப்பு ரூ. 88,030 50 காசுகள்.

(இ) இங்ஙனம் இழக்கப்பட்ட புத்தகங்களின் பொறுப்பு சம்பந்தப்பட்ட நூலகங்களின் ஊழியர்களேயே சாரும்.

இழக்கப்பட்ட புத்தகங்களின் ரூபாயின் மதிப்பு தொடர்புடைய நூலகங்களின் நூலகர்கள், சிற்றெழுத்தர், கடைநிலை ஊழியர் ஆகியோரின் மாதாந்திர ஊதியத்திலிருந்து தவணை முறையில் திருப்பிப் பெறப்படுகிறது.

[31st August 1970

நூலகங்களின் உறுப்பினர்களால் இழக்கப்பட்ட புத்தகங்களின் மதிப்பு அவ்வுறுப்பினர்களிடமிருந்து பெறப்படுகிறது அல்லது அவர்களால் செலுத்தப்பட்ட பொறுப்புப் பணத்தில் சரிக்கட்டப்படுகிறது. நூல்களைத் தாங்களே எடுத்துப் படிக்க வசதி (Open access system) உள்ள நூலகங்களில் இழந்த நூல்களின் மதிப்பீட்டில் குறிப்பிட்ட சதவீதம், மாவட்ட நூலக ஆணைக்குழு மற்றும் மாநில நூலக இயக்குனர் அவர்களின் அனுமதியின் பேரில் தள்ளுபடி செய்து மீதிப் பணம் தொடர்புடைய நூலக ஊழியர்களிடமிருந்து வசூலிக்கப்படுகிறது.

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி : இந்த நூலகங்களிலிருந்து புத்தகங்களை எடுத்துச் சென்று மூன்று ஆண்டுகளுக்கு மேலாகியும் கூட அந்தப் புத்தகங்களை எடுத்துச் சென்றவர்களுக்கு எத்தகைய கடிதமோ ரிமைண்டர்களோ வரவில்லை. எனக்குத் தெரிந்த இரண்டு, மூன்று பேர்கள் இப்படிப் புத்தகங்களை எடுத்துவந்து மூன்று ஆண்டுகளுக்கு மேலாக அப்புத்தகங்களை அவர்களே வைத்துக்கொண்டிருக்கிறார்கள். ரிமைண்டர்கள் எதுவும் அவர்களுக்குப் போகவில்லை. இத்தகைய நிலைக்குக் காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : ஒரு குறிப்பிட்ட காலத்தில் திருப்பிக் கொண்டுவந்து நூல்களைத் தராவிட்டால், உடனே எழுதி அந்த நூலை வரவழைக்க வேண்டுமென்று விதியிருக்கிறது. அப்படிக் கேட்கப்படாமல் சிலபல இடங்களிருந்தால், அதன்பேரில் நடவடிக்கை எடுக்கப்படும். குறிப்பிட்ட இடத்தைப்பற்றி கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டால், அதற்குரியவர்கள் மீது நடவடிக்கை எடுக்கலாம்.

THIRU D. SANTOSHAM : I would like to know what is the deposit amount that is collected from each individual and what is the limit up to which he is allowed to take out books ? Is he allowed to take one or two books or half-a-dozen books at a time ? Is there any restriction ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இப்போது ரூ. 5 என்ற அளவுக்குத்தான் கட்டணம் வசூலிக்கப்படுகிறது. ஒவ்வொரு தடவையும் ஒரு புத்தகம்தான் எடுத்துக்கொண்டு போகலாம் என்று விதியிருக்கிறது.

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி : இந்த நூலகங்களுக்குத் தமிழ் நூல்கள் அதிகமாக வாங்கக் கூடிய சூழ்நிலையிருப்பதால் புத்தகங்களைத் தேர்ந்தெடுக்கும் குழுவில் தமிழ் ஆசிரியர்களும் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டுமென்ற கோரிக்கை நீண்ட நாட்களாக இருப்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ? அதுபற்றி என்ன முடிவு அரசு எடுக்க இருக்கிறது?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : அதுபற்றிய தகவல் எதுவும் இப்போது என்னிடத்தில் இல்லை. அதுபற்றிய தனிக் கேள்வி போட்டால், விவரம் அறிந்து கொள்ளலாம்.